# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**
**முறையீட்டு மனு எண்.192/2017/பே.2**
**ஆணை எண். 80 /2018 நாள்: 28–03–2018**

**திரு ஜெ. ரவி,**
**த/பெ (லேட்) ஜெயராமன்,**
**179/ ஜி, பெரியார் நகர்,**
**துறையூர் (வ) ,**
**திருச்சி மாவட்டம்,**
**621 010.** — முறையீட்டு மனுதாரர்.

**செயல் அலுவலர்,**
**வடமதுரை பேரூராட்சி,**
**திண்டுக்கல் மாட்டம்.** — எதிர் மனுதாரர்

**ஆணை**

திரு J. ரவி, த/பெ திரு ஜெயராமன் (லேட்) 179/G. பெரியார் நகர், துறையூர், திருச்சி மாவட்டம், முறையீட்டு மனுதாரரின் 28.09.2017ம் நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.10.2017 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 192/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

மனுதாரர் திரு.J. ரவி, தனது முறையீட்டு மனுவில், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், வடமதுரை பேரூராட்சி 10வது வார்டு, எம்.ஜி.ஆர் நகரில் திருமதி தாயாரம்மாள், க/பெ திரு சௌந்தரராஜன் என்பவருக்கு 17 லயன் வீடுகள் உள்ளதாகவும், இந்த 17 வீடுகள் அமைந்துள்ள இடம் சர்வே எண் 1635/2, 1 எனவும், இதில் திருமதி தாயாரம்மாள் என்பவருக்கு சொந்தமான இடம் 2.5 சென்ட் மட்டும் எனவும் தெரிவித்துள்ளார். மீதமுள்ள இடம் யாவும் குளத்தினை மண் கொட்டி மூடி அதன் மீது வீடு கட்டியுள்ளதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலர், வடமதுரை அவர்களுக்கு 27.07.2016ல் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் விவரம் கோரியதாகவும், வடமதுரை

பேரூராட்சி செயல் அலுவலரால் அனுப்பிய கடிதத்தில் 22.07.2016ல் மேற்படி ஆக்கிரமிப்பு ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு குளத்தினை அளந்து அத்துமால் செய்யக் கோரி வேடசந்தூர் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

மேலும் 05.05.2017ல் மீண்டும் தகவல் பெறும் சட்டத்தின் கீழ் மனு செய்ததாகவும், அதற்கும் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றல் தொடர்பாக பணி தொடர் நடவடிக்கையில் இருப்பதாக பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்ததாக தெரிவித்து கடந்த 15 மாதங்களாக மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்ற பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் ஆக்கிரமிப்பாளர் திரு ராமராஜன், த/பெ திரு சௌந்திரராஜன் ஆகியோர் ஆக்கிரமிப்பினை அகற்ற மறுப்பதாகவும் தெரிவித்து மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்ற மறுத்துள்ள பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 11.10.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி வடமதுரை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 10.11.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி பொருள் சம்பந்தமாக தங்களின் விளக்கத்தினை பதிவு செய்யக் கோரி முறையீட்டு மனுதாரர் மற்றும் வடமதுரை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 06.02.2018ல் ஆஜராக ஆணையிடப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை பேரூராட்சி செயல் அலுவலர் தனது07.11.2017ம் நாளிட்ட கடிதம் மூலம் தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை பேரூராட்சி 10–வது வார்டு எம்.ஜி.ஆர் நகரில் திருமதி தாயாரம்மாள், க/பெ திரு சௌந்திரராஜன் என்பவர் தனது வீட்டினை ஒட்டியுள்ள குளத்தினை மண் மேவி வீடு கட்டியுள்ளதால் அவர்களுக்கு சொந்தமான வீடுகள் குறித்த ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்க வடமதுரை பேரூராட்சியின் மூலம் 24.08.2016ல் கோரியதாகவும், இதன் தொடர்ச்சியாக திருமதி தாயாரம்மாளுக்காக திரு ராமராஜன், த/பெ திரு சௌந்திரராஜன் என்பவரை விசாரணைக்கு வடமதுரை பேரூராட்சி செயல் அலுவலரின் 01.09.2016ம் நாளிட்ட கடிதம் வாயிலாக அழைத்ததாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக திருமதி தாயாரம்மாள், திரு ராமராஜன் மற்றும் திருமதி விஜயா ஆகியோரின் சார்பாக ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆட்சேபணை தெரிவித்து வழக்கறிஞர் மூலமாக 04.11.2016ல் நோட்டீஸ் அனுப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மனுவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக ஆக்கிரமிப்புகள் உள்ள பகுதியினை அளந்து அத்துமால் செய்து தர வேடசந்தூர் வட்டாட்சியருக்கு வடமதுரை பேரூராட்சி செயல் அலுவலரால் 24.08.2016ல் கடிதம் எழுதப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து திரு ராமராஜன் மற்றும் திரு ஜனகம் ஆகியோரால் வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தங்களின் சொத்துக்களை அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வழக்கு எண் 226/2009ல் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேடசந்தூர் வட்டாட்சியர் அவர்களை தொடர்பு கொண்டு ஆக்கிரமிப்பு பகுதிகளை அளந்து அத்துமால் செய்து ஆக்கிரமிப்புகளை விரைந்து அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் வடமதுரை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

24.01.2018ம் நாளிட்ட வடமதுரை பேரூராட்சி செயல் அலுவலரின் கோரிக்கையின்படி 06.02.2018 அன்று நிர்ணயிக்கப்பட்ட விசாரணை 21.03.2018க்கு மாற்றியமைத்து இம்முறைமன்ற நடுவ 14.02.2018ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

வடமதுரை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2018 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் 01.09.2017 முதல் வடமதுரை பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், அதற்கு முன்னர் அரவக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தெரிவித்துள்ளவாறு வடமதுரை எம்.ஜி.ஆர் நகர் 10-வது வார்டில் திரு ராமராஜன் என்பவர் நீர் நிலையினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ள விவரம் தன்னால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டதாகவும், இது குறித்து வட்டாட்சியருக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். வட்டாட்சியர் ஆக்கிரமிப்பு பகுதியினையும், பட்டாநிலத்தினையும் பிரித்து அளந்து வருவதாகவும், தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது உண்மை எனவும், ~~மேற்படி~~ அளந்து முடிந்தபின் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் எனவும் தெரிவித்து இதற்கான அறிக்கையினை சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் வடமதுரை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்நிலையில் இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் நேரடி வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு இந்த ஆக்கிரமிப்பு சம்பந்தமான வழக்கின் தீர்ப்பு நிலையினை கருத்தில் கொண்டும், வருவாய்த்துறையினர் ஆக்கிரமிப்பினை அளந்து அத்துமால் செய்து கொடுத்தவுடன் மேற்படி நீர்நிலை ஆக்கிரமிப்பினை உரிய விதிமுறைகளின்படி அகற்ற நடவடிக்கை எடுக்க வடமதுரை பேரூராட்சி செயல் அலுவலருக்கு தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் வருடம் மார்ச் திங்கள் 28 -ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

பெறுநர்

1.திரு ஜெ. ரவி,
த/பெ (லேட்) ஜெயராமன்,
179/ ஜி, பெரியார் நகர்,
துறையூர் (வ) ,
திருச்சி மாவட்டம்,
621 010.

2.செயல் அலுவலர்,
வடமதுரை பேரூராட்சி,
வேடசந்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம் - 624 802

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
திண்டுக்கல்.